**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.219/2024 - PW- 4**

| | |
|---|---|
| Name | திரு. மாரிமுத்து |
| Husband/Father Name | துரைசாமி |
| Village /Area | கீழ்வெங்கடாபுரம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 56 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 04.09.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் உறங்கி கொண்டிருந்த போது எதிர் வீட்டில் சரவணனுக்கும் வேறொருவருக்கும் சண்டை நடந்தது அது சம்பந்தமாக போலீசார் சம்பவ இடமான எதிர் வீட்டிற்கு வந்து என்னிடம் கையொப்பம் இடுமாறு கூறியதன் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர் தான்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

19.06.2024 ம் தேதி இரவு எங்கள் ஊரை சேர்ந்த சுப்பரமணியும் நானும் கீழ்வெங்கடாபுரம் ரோட்டு தெருவில் பேசிக்கொண்டிருந்ததாகவும், சரவணன் வீட்டு அருகே விநாயகம் மனைவி மகாலட்சுமியும் சரவணனும் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது விநாயகம் அவரது மனைவியை அவரது வீட்டிற்கு அழைத்து செல்ல முற்பட்ட

போது சரவணன் ஏன் அவளை அடிக்கிறாய் என்று அசிங்கமான வார்த்தையால் திட்டி, விநாயகத்தினுடைய லுங்கியை இழுத்ததாகவும் விநாயத்தினுடைய ஆணுறுப்பை வெட்டியதை நான் நேரில் பார்த்தாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி என் ஊர்காரர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.05 14:30:15 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.